DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SENDAMANGALAM

C.C.No.309/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சந்திரசேகரன் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 23.07.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 22.08.2025ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி நானும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் எருமப்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பவித்திரம் பஸ்டாப் அருகே உள்ள ஏரிக்கரையில் கண்காணித்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் பிராந்திபாட்டில் உடன் நின்று கொண்டிருந்தார். அவர்தான் ஆஜர் எதிரி **(**சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.**)**

ஆஜர் எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் தீரன் த.பெ.கண்ணன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானத்தை விற்பனைக்கு

வைத்துள்ளதாக கூறினார். ஆஜர் எதிரி தன் வைத்திருந்த சாக்கு பையை ஆய்வு செய்தபோது அதில் தலா 180 ML அளவுள்ள Express Brandy மதுபானம் 27 பாட்டில்கள் இருந்தது. எதிரி அவற்றை விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார். அதனால் ஆஜர் ஆஜர் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானம் இருந்த பாட்டில்களுடன் நிலையம் வந்து தனியறிக்கையுடன் ஆஜர் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த மதுபானத்தை உதவி ஆய்வாளர் திரு. செல்லதுரையிடம் ஒப்படைத்தேன். (தனி அறிக்கை அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) உதவி ஆய்வாளர் சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.239/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

வழக்கை உதவி ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.45 மணிக்கு ஆஜர் எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தார். பின்னர் ஆய்வாளர் ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி மற்றும் எனது முன்னிலையில் மதியம் 13.00 மணிக்கு பதிவு செய்தார்.

எதிரி தீரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு மதுபானத்தை விலைக்கு வாங்கி அதை அதிக விலைக்கு அங்கு வரும் நபர்களுக்கு விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த தலா 180 ML அளவுள்ள Express Brandy மதுபானம் 27 பாட்டில்கள் அஜர் செய்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் மாலை 13.45 மணிக்கு கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எதிரியை அவர் வைத்திருந்த மதுபான பாட்டில்களுடன் நான் எனது செல்போனில் புகைப்படம் எடுத்தேன். (புகைப்படம் அ.சா.ஆ.**4** ஆகவும், பிரிவு **63(4) (C) BSA** சான்றிதழ் அ.சா.ஆ.**5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)

பின்னர் உதவி ஆய்வாளர் உடன் 28.08.2025 தேதி மாலை 16.00 மணிக்கு நானும் தலைமை காவலர் திரு.சின்னத்தம்பி சம்பவ இடம் சென்றோம். உதவி ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் பைபாஸ் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. நாங்கள் விசாரித்த பொதுஜன நபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி சாக்குபையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலையில் மேற்படி சாக்குபையை கைப்பற்றி காவல் ஆய்வாளர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. நானும் என்னுடன் வந்த அ.சா.2 சின்னத்தம்பியும்தான் எதிரியை காவல்நிலையம் அழைத்து சென்றோம் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்துதான் எதிரியிடம் இருந்து ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் பெற்றோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 புகைப்படம் காவல்நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்ததற்கு பின்னிட்டுதான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட

பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்களில் இருந்து ஆய்வுக்காக எங்கள் முன்னிலையில் மதுபானங்களை எடுத்து வைக்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீதுபொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**